மாமலை தாங்கிய மேகங்களே உம்மை வணங்கிட வந்தோமே
கொடும் போரினில் பகையை சாய்த்தவரே உங்கள் நினைவுகள் சுமந்தோமே

கண்கள் குழமாய் ஆகியதே உங்கள் பிரிவுகள் தாங்காமல்
மனம் எங்கும் இருள் மூடியதே வழி காட்டிகள் இல்லாமல் 2
உங்கள் நினைவுகள் ஆறாது ஈழ கனவுகள் ஓயாது
எங்கள் தமிழர்கள் மனமும் அனுதினமும்
உம்மை நினைத்திட மறக்காது
உங்கள் ஈகம் சாகாது

மாமலை தாங்கிய மேகங்களே உம்மை வணங்கிட வந்தோமே
கொடும் போரினில் பகையை சாய்த்தவரே உங்கள் நினைவுகள் சுமந்தோமே

வரும் வழியில் உம்மை வழி நெடுகே நாம் இழந்து வந்தோமே
உங்கள் குரல் மொழி கேட்க முடியாதின்றி குமுறி அழுதோமே 2
ஒரு கொடி மலராய் ஒரு தாய் உறவாய் ஒன்றி வாழ்ந்தோமே
ஆழும் உரிமையோடிருந்த பவீக மண்ணில் ரத்தம் சொரிந்தோமே
உங்கள் உயிர்களை இழந்தோமே

மாமலை தாங்கிய மேகங்களே உம்மை வணங்கிட வந்தோமே
கொடும் போரினில் பகையை சாய்த்தவரே உங்கள் நினைவுகள் சுமந்தோமே

கனவுகள் சுமந்த உங்களின் இதய கதவுகள் திறக்காத
ஈழ மனங்களில் கிடந்த எண்கள் யாவும் நாளை பலிக்காதா 2
உணர்வுகள் இங்கே உறங்கிடுமா ஒரு உணர்வலை அடிக்காதா
எம்மை பிணங்களாய் தெருவில் வீசிய எதிரியை எரித்திட முடியாதா
பகையை அழித்திட முடியாதா

மாமலை தாங்கிய மேகங்களே உம்மை வணங்கிட வந்தோமே
கொடும் போரினில் பகையை சாய்த்தவரே உங்கள் நினைவுகள் சுமந்தோமே